**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண். 1

கடையநல்லூர் நகராட்சி **15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2021–22 Tied** அலகின் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோக பணிகள் ரூ.176.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில், **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31116/2021/அம்ருட்–2 நாள்.06.12.2021ன்படி 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2021–22 Tied அலகின் கீழ் முதற்கட்டமாக 11 பணிகளுக்கு ரூ.120.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.** இந்நிலையில் தற்போது இரண்டாவது கட்டமாக **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31116/2021/அம்ருட்–2 நாள்.05.01.2022ன்படி 5 எண்ணம் பணிகளுக்கு ரூ.55.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.** அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| **15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2021–22 Tied மான்யம்** | | |
| 1. | கடையநல்லூர் நகராட்சி – பொது சுகாதாரபிரிவிற்கு S450 SKID STREET LOADER VEHICLE விநியோகம் செய்யும் பணி. | ரூ.25.00/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி –போகநல்லூர் உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு பேவர் பிளாக் அணுகு சாலை அமைத்தல் பணி. | ரூ.9.50/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி– தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளிக்கிணற்றினை தூர்வாறும் பணி. | ரூ.4.50/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி– குடிநீர் வழங்கும் கல்லாற்று நீரேற்று நிலையத்தில் பாதுகாப்பு சுவர் கட்டும் பணி. | ரூ.9.50/– |
| 5. | கடையநல்லூர் நகராட்சி– குடிநீர் வழங்கும் கல்லாற்று நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார் இயக்குபவர் அறை கட்டும் பணி. | ரூ.7.00/– |
| | மொத்தம் | **ரூ.55.50** |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டபணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் **06.01.2022** அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 5427/2021/இ1)**

**தீர்மான எண். 12**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 2

கடையநல்லூர் நகராட்சி **15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2021–22 UnTied** அலகின் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் சாலைப்பணிகள், மழைநீர்வடிகால் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள்

ரூ.116 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில், **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31116/2021/அம்ருட்–2 நாள்.05.01.2022ன்படி 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2021–22 UnTied அலகின் கீழ் சாலைப்பணிகள், மழைநீர்வடிகால் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் 7 எண்ணத்திற்கு ரூ.76.00/– இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.** அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| **15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் –2021–22 UnTied மான்யம்** | | |
| 1. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண். 20 அட்டக்குளம் ஊரணி வடக்கு பகுதியில் பாதுகாப்பு சுவர் கட்டும் பணி. | ரூ.10.00/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண். 10 மாவடிக்கால் இரயில்வே பீடர் ரோட்டில் தார்சாலை அமைக்கும் பணி. | ரூ.9.00/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.24 அயோத்தி நகர் 3வது குறுக்கு தெரு மண்சாலையில் மழை நீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | ரூ.9.20/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.07 வடக்குவாச்செல்வி அம்மன் கோவில் வடக்குத் தெரு மற்றும் மேற்கு தெரு மண்சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்றும் பணி. | ரூ.9.90/– |
| 5. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.32 ரஹ்மானியபுரம் 8வது தெரு மற்றும் 8வது மத்திய 2ம் தெருவில் மண்சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்றும் பணி. | ரூ.9.30/– |
| 6. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.22 இப்றாகிம் நகர் 2ம் தெருவில் மழை நீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.9.50/– |
| 7. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.22 மங்கம்மாள் சாலையில் மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | ரூ.9.60/– |
| | மொத்தம் | **76.00** |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டபணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 06.01.2022 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 5427/2021/இ1)**

**தீர்மான எண். 13**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.19089/2021/E2 நாள்.19.11.2021ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், GAP FILLING INTERST FUND மான்ய நிதி 2021–2022 RETROFITTING CT/PT அலகின் கீழ் கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.22 இந்திரா நகர் புதிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணியினை ரூ.5,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.644

நாள்.21.12.2021ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 12.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.குத்தாலிங்கம்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.23%<br>குறைவு | ரூ.5250/–செல்லாண் எண்.141/001/2/21–22/0009191 நாள். 12.01.2022ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. G. முப்புடாதி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 7.98%<br>அதிகம் | ரூ.5250/– UNION Bank Kdnr D.D.No.467138 நாள். 12.01.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.23% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.குத்தாலிங்கம், ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**தீர்மான எண். 14**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.19089/2021/E2 நாள்.19.11.2021ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், GAP FILLING INTERST FUND மான்ய நிதி 2021–2022 RETROFITTING CT/PT** அலகின் கீழ் கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.22 மங்கம்மா சாலை பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பணியினை ரூ.5,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.644 நாள்.21.12.2021 ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 12.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.K.முத்துகிருஷ்ணன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.10%<br>குறைவு | ரூ.5250/–செல்லாண் எண்.141/001/2/21–22/0009195 நாள். 12.01.2022 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. M.ராஜேந்திர பிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 7.98%<br>அதிகம் | ரூ.5250/– TMB Bank Kdnr D.D.No.423995 நாள். 12.01.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S.K.முத்துகிருஷ்ணன், ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**தீர்மான எண். 15**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

கடைநல்லூர் நகராட்சியில் 24.05.2021ம் தேதி முதல் தூய்மை பணியாளராக பணி புரிந்து வரும் திரு.R. சந்திவீரன் என்பவர் சாத்தூர் நகராட்சிக்கு பணிமாறுதல் வழங்க கோரி 14.12.2021ம் தேதி

விண்ணப்பித்துள்ளார். இவர் மீது இந்நகராட்சியில் இவருடைய பணியிடத்தில் நிர்வாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. எனவே திரு.R. சந்திவீரன் தூய்மை பணியாளர் என்பவருக்கு கடைநல்லூர் நகராட்சியில் இருந்து சாத்தூர் நகராட்சிக்கு பணியிடமாறுதல் வழங்கிட மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5881/2021/எச்1)**

**தீர்மான எண். 16**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

கடையநல்லூர் நகராட்சி –15வது நிதிக்குழு மான்ய திட்டம் 2021–2022 தேசிய சுகாதார குழுமம் மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2021–2022ன் கீழ் திட்டபணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கான மாவட்ட அளவிலான மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தென்காசி அவர்களின் வழியாக தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு **KAL-PUBLICATION (P) LTD** என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.18673/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5926/2021/இ1)**

**தீர்மான எண். 17**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

மாவட்ட ஆட்சியர் தென்காசி அவர்களின் அறிவுரையில் தெரிவித்துள்ளபடியும், மாலைமலரின் பொங்கல் மலர்–2022 வெளியிட உள்ளதால் 2021–2022ம் ஆண்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளனர். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் 2021–2022ம் ஆண்டில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை மாலைமலரின் பொங்கல் மலர்–2022 விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தமிழக அரசின் சாதனையை விளக்கும் பொருட்டு, மாலைமலரின் பொங்கல் மலர்–2022 வெளியிட உள்ளதை கருத்திற்கொண்டு இந்நகராட்சிப் பகுதியில் 2021–2022ம் ஆண்டில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்க இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.123/2022/இ1)**

**தீர்மான எண். 18**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**